# அறிவித்தல்

## வீடமைப்புத்திட்டம் - 2025

மேற்படி திட்டத்தின் கீழ் சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பட்டியலில் பயனாளிகள் என கருதப்படும் பெயர்களுடைய நபர்கள் தொடர்பாக,

- இவர்களின் பெயரிலோ அல்லது இவரது குடும்ப அங்கத்தவர் பெயரிலோ இலங்கையின் எந்தப் பாகத்திலும் நிரந்தரவீடு இல்லை.
- வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேற்றத்தின் பொருட்டு தனது சொந்தக் காணியில் மீள்குடியேறி அக்காணியில் வசித்தல் வேண்டும்.
- இப்பயனாளி மீளக்குடியமர்ந்துள்ள காணி தனது சொந்தக்காணி என்பதனை சட்டபூர்வ ஆவணம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
- இப்பயனாளியின் பெயரிலோ, அவரது குடும்ப அங்கத்தவர் பெயரிலோ எதுவித அரச, அரசசார்பற்ற நிறுவனம் மூலம் வீட்டுத்திட்டம் ஏற்கனவே வழங்கப்படவில்லை.
- 2009ம் ஆண்டிற்கு முன்னர் திருமணம் முடித்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த குடும்பம். (போரால் பாதிக்கப்பட்ட மூலக்குடும்பங்கள் )
- தற்போதய பொருளாதார நெருக்கடியினால் பொருட்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் வீட்டினை பூரணப்படுத்தக்கூடிய ஆற்றலைக்கொண்டிருக்கும் குடும்பங்கள்.

இப்பட்டியலில் உள்ளவர்களின் விபரங்கள் தொடர்பில் தனிநபர் அல்லது சமூகமட்ட அமைப்புக்கள் மேன்முறையீடு செய்ய விரும்பின் முறைப்பாட்டினை **பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சங்கானை** என்ற முகவரிக்கு**14.03.2025** ற்கு முன்னர் எழுத்து மூலமாக முறைப்பாட்டினை செய்யலாம். (தங்களது முறைப்பாடுகளை பிரதேச செயலக வரவேற்பு கருமபீடத்தில் இதற்கென அமைக்கப்பட்ட முறைப்பாட்டுப் பெட்டியினுள் இடலாம் அல்லது தபாலுறையில் இடதுபக்க மேல்மூலையில் “வீடமைப்புத்திட்ட முறைப்பாடு” எனக்குறிப்பிட்டு தபால் மூலம் அனுப்பி வைக்கலாம்).

**குறிப்பு :- இங்கே காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் இறுதிப்பட்டியல் அல்ல.**
முறைப்பாடுகளின் பரிசீலனையின் பின்னர் மாற்றங்கள் ஏற்படலாம். தெரிவு செய்யப்பட்டவர்கள் தேவைப்படும் வலிதான ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் அவர்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

பிரதேச செயலாளர், திகதி 05.03.2025
வலி,மேற்கு,
சங்கானை.